# பறந்து போனாயே!



வண்ணச் சிரிப்பழகன் வாய்மொழிச் சொல்லழகன்!
திண்ணமாய் பலகதைகள் திகைப்பூட்டப் பேசிடுவான்!
எண்ணிலடங்கா நண்பர்கள் அவனுக்குத் தானுண்டு!
கண்ணக் குமிழ்ச் சிரிப்பில் கதைகள் கேட்டிடுவான்!

அன்னவனை அறிந்திடா ஊர்மக்கள் எவருமில்லை!
பொன்னிகர் சிரிப்புடையோன் **ஜவகராய்**ப் பெயர்சூட,
மன்னிய எங்கள் அன்பில் எந்நாளும் **நேரு** வானான்!
சின்னவயது நிகழ்வுகள்தாம் சிந்தையிலே எழுந்துவரும்!

வண்ணமாய்ப் பறந்திடுவான் வாய்ச்சொல் முடியும்முன்னே!
**கண்ணகி**க்கோ அன்பின்சீர் தம்பியவன் எந்நாளும்!
கண்ணாற எங்கள் பாட்டி கண்டிடுவாள் தாத்தாவையே!
எண்ணத்தில் காணும் எளிமை கடுகியே உண்ணும் சீர்மை!

எங்கள் யாவருக்கும் இணையாக நல்அன்பு செய்வோன்!
சிங்கமென நிறைந்ததொரு தோற்ற வடிவு கொண்டோன்!
தங்கமகன் இகவாழ்வை இறையவனோ ஏன்முடித்தான்?
பங்கமிலா அவனன்பைத் தானும் பருகி மகிழ்ந்திடவோ!

**நீங்கா நினைவுடன்**,
அண்ணன் ஆகிய

**கு.ப.அசோகன்**,
31-07-2023 (இரவு 10-30)

